**THE LABOUR COURT, SALEM**
**C.P.No. 12 Of 2022**

**<u>20.03.2025</u>**

**PW1 –** திரு. முகமது இஸ்மாயில்
குறுக்கு விசாரணை – (எதிர்மனுதாரர் தரப்பில்)

நான் 07.06.1986 ல் நடத்துநராக பணியில் சேர்ந்து 30.06.2017 ல் முதுநிலை பயணச்சீட்டு பரிசோதகராக பணிஓய்வு பெற்றேன். நான் Supervisor Category யில் பணிபுரிந்து பணிஓய்வு பெற்றதால் தொழிலாளி என்ற வரையறைக்குள் வரமாட்டேன் என்றால் சரியல்ல. 13 வது ஊதிய ஒப்பந்தம் 04.01.2018 ல் நடைமுறைக்கு வந்தது என்றால் இல்லை. அறிவித்தது 01.01.2018 ல் ஆனால் 2016 வருடம் 9 ம் மாதம் முதல் அமுல்படுத்தப்பட்டது. நான் 2 மாதங்களுக்கு முன்பு வாங்கிய பென்சன் தொகை ரூ.25,458/–. தற்போது வாங்கி வரும் பென்சன் தொகை சுமார் ரூ.2,100/– சேர்த்து வருகிறது. ஈட்டியவிடுப்பு தொகை தவறான கணக்கீட்டில் ரூ.26,116/– கோரியுள்ளேன் என்றும், உண்மையில் வரவேண்டிய ஈட்டியவிடுப்பு தொகை ரூ.7,451/– என்றால் சரியல்ல. நான் 2017 ல் பணிஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான்.

எனக்கு 1986 ல் நிர்வாகம் கணினிமயமாக்கப்பட்டு 25 ம் தேதி முதல் அடுத்த மாதம் 24 ம் தேதி வரை கணக்கிட்டு சம்பளம் வழங்கப்பட்டது என்றால் 25 முதல் 25 தேதி வரை கணக்கிட்டு கொடுத்தார்கள்.. ஆனால் 6 நாள் சம்பளம் நிலுவை தொகை யாக உள்ளது. நிரர்வாகம் கணினிமயமாக்கப்பட்டபோது எனக்கு 6 நாள் சம்பளம் கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. நான் பணிஓய்வு பெறும்முன் கடைசியாக வாங்கிய சம்பள தொகை எவ்வளவு என்றால் ஞாபகம் இல்லை. என்னுடைய கணக்கீட்டுமனு விபரங்களை சரியாக சொல்லமுடியவில்லை என்றும் அதனால் நான் கடைசியாக பெற்ற மாத சம்பள விபரத்தை

மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பணிஓய்வு பெறுவதற்கு முன்பு கடைசியாக வாங்கிய அடிப்படை சம்பளம் ரூ.48,300/– என்றால் சரிதான். இது கடைசி மாத சம்பளம் என்றால் சரிதான். கடைசி மாத சம்பளத்தைதான் அதற்கு முந்தைய மாதம் வாங்கினேன் என்றால் இல்லை. என்னுடைய வங்கிக்கணக்கு புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நகல் கொடுத்துள்ளேன். எனக்கு வரவேண்டிய ERBS தொகை ரூ.17,600/– வந்துவிட்டது என்றால் 5 வருடங்கள் கழித்து வட்டி இல்லாமல் கொடுத்தார்கள்.

IRTT பங்குத்தொகை இன்னும் வழங்கப்படவில்லை. IRTT பங்குத்தொகை என்னுடைய வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுவிட்டது என்றும் நான் சரியாக பார்க்காமல் தொகை வரவில்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது எனக்கு பென்சன் தொகை 14% அகவிலைப்படி சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். 13 வது ஊதிய ஒப்பந்தப்படி எனது சம்பளத்தை தவறான கணக்கீட்டு அடிப்படையில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றும் 13 வது ஊதிய ஒப்பந்தம் எனக்கு பொருந்தாது என்றும் சொன்னால் சரியல்ல. கணக்கீட்டு மனுவை தவறான கணக்கீட்டின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளதால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. ERBS, IRTT தொகைகள் தொழிலாளர் நலன் சார்ந்த தொகைகள் என்பதால் அதற்கு வட்டி கோர இயலாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem